# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1854 - 2014 මාර්තු මස 14 වැනි සිකුරාදා - 2014.03.14

*1854 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 208 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 208 |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 208 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 209 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மாச்சு மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2014 இன் இல. 195*

*எம்ஓடி/டிஈஎப்/03/02/ஆர்ஈரீ/48.*

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் நிரந்தரக்கடற்படை உபசேவைக்கு மாற்றம் செய்தல்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் நிரந்தரக் கடற்படையிலிருந்து நிரந்தரக் கடற்படை உபசேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*கொமான்டர் (என்பீ) ஜயவீர ஆரச்சிகே ஜயந்த குமார பெரேரா, இகப - என்ஆர்பீ 0741*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2012, செத்தெம்பர் 15.*

*3-362*

---

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2014 இன் இல. 192*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:*

*இலங்கை விஞ்ஞான சேவையின் I வகுப்பைச் சேர்ந்த திரு. எல். சந்திரபால அவர்கள் 2013, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.*

*3-330/1*

*2014 இன் இல. 193*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:*

*இலங்கை விஞ்ஞான சேவையின் I வகுப்பைச் சேர்ந்த திரு. எஸ். ஏ. அனுர சதுரசிங்க அவர்கள் 2013, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை காடு பேணல் திணைக்களத்தின் காடு பேணுநர் தலைமை அதிபதியாக.*

*3-330/2*

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்**

*இலங்கை புகையிரத சேவையாளர் நலன்புரிச் சங்கம் விசேட வாங்கெடுப்பை நடாத்துதல்*

*இலங்கை புகையிரத சேவையாளர் நலன்புரி சங்கத்தின் விசேட வாக்கெடுப்பு 2014.01.12 ஆந் திகதி தெமட்டகொடை புகையிரத இயக்கவலு விளையாட்டு உறுப்பினர்கள் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.*

*2. அங்கு 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களுக்காக வேண்டி சங்கத்தின் முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு உறுப்பினர் வாக்களிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சபை கீழுள்ளவாறு அமையப்பெற்றுள்ளதென்பதை அறிவித்துக் கொள்கிறேன்.*

*தலைவர் : திரு. கே. டி. பிரியலத்*
*உப தலைவர் : திரு. எச். ரி. எல். காளிதாச*
*பொருளாளர்/செயலாளர் : திரு. டி. பி. கே. சில்வா*
*சபை உறுப்பினர்கள் : 1. திரு. பி. ஏ. ஆர். பெர்னாந்து*
*2. திரு. எம். ரீ. குரே*

3. திரு. எஸ். ரீ. எல். சோமரத்ன
4. திரு. கே. ஜயந்த
5. திரு. எம். ஏ. ஆர். சாந்தகுமார
6. திரு. எம். ஜி. என். துசார
7. திரு. எச். பி. நிஷாந்த
8. திரு. எச். எல். எச். ரி. சில்வா
9. திரு. எல். ஜி. பி. ஜயரத்ன
10. திரு. கே. டபிள்யூ. ஏ. எஸ். பெரேரா
11. திரு. ரீ. எம். நிஷாந்த
12. திரு. பி. சி. ஜயதிஸ்ஸ

பி. ஏ. பி. ஆரியரத்ன,
புகையிரத முகாமையாளர்.

3-328

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2013.12.12 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப் பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. "பிரசித்த நொத்தாரிசு டி. கித்துல்கொட அத்தாட்சிப்படுத்திய 2011.01.13 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 2517 இன் பேரில் இல. 62/A, கென்னன்துடாவ, ஹல்தொட்ட என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. கஹவலகே உபுல் பெரேராவிடமிருந்து முதலும் 2013.10.22 ஆந் திகதி வரை வட்டியும் மூன்று கோடியே பன்னிரண்டு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து தொளாயிரத்து பத்து ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 3,12.,67,910.71) அத்துடன் இரண்டு கோடியே நாற்பது இலட்சம் ரூபா (ரூ. 2,40,00,000) மீது ஆண்டுக்கு இருபத்தொன்று தசம் ஐந்து (21.5%) வீதத்தில் 2013.10.23 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. 2011.01.13 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட முறி. இல. 2517 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட மூன்று கோடியே பன்னிரண்டு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து தொளாயிரத்து பத்து ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 3,12.,67,910.71) அத்துடன் 2013.10.13 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப் பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்ததும் இலங்கை வங்கிக்கு ஈடுவைத்ததுமான சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு, இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவும் (அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கமைய இல. 290, ஹவ்லொக் ரோட், கொழும்பு 5 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவின் ஏலதாரருக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவின் கீழ் இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கியின் ஹொரணை மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் றைகம் கோரறை கும்புகே பற்றுவில் ஹொரணை தெற்கு, கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 615A ஹொரணை பிரதேச செயலாளர் பிரிவில் ஹொரணை பட்டின சபை எல்லைகளுள் ஹொரணையில் அமைந்த "வெவஹேன" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஏ. பீ. ஜயசூரிய தயாரித்த 2010, ஒற்றோபர் 01 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5391 இல் விபரித்த துண்டு 2L என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 5391 இல் விபரித்த அதே காணியின் துண்டு 2J மற்றும் துண்டு 2K உம் (4.5 மீ. அகல ஒதுக்கப்பட்ட பாதை) ; கிழக்கில் : துண்டு E உம் ; தெற்கில் : துண்டு G உம் ; மேற்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. பீ. கே. கொஸ்தா தயாரித்த 1982.01.19 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1525 இல் விபரித்த அதே காணியின் துண்டு1 உம் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் மற்றும் இருபத்திரண்டு தசம் எட்டு பேர்ச்சஸ்கள்(0ஏ. 2றூ. 22.8பே.) அல்லது சைபர் இரண்டு ஆறு சைபர் சைபர் ஒன்று ஹெக்டயர்கள் (ஹெக். 0.26001) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட ஹொரணையில் அமைந்த "வெவஹேன" என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபட இல. 5391 இல் விபரித்த துண்டு 2K என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட மற்றும் குறித்த காணித்துண்டு மீதான வழி உரிமையும் வடக்கில் : பாணந்துறையிலிருந்து இரத்தினபுரி வரை பிரதான ரோட்டும் துண்டு D உம் ; கிழக்கில் : துண்டுகள் D மற்றும் E உம் ; தெற்கில் : துண்டு 21 உம் ; மேற்கில் : துண்டுகள் 2J, 2H, 2F (3.05 மீ. அகல ரோட்) 2E, 2C, 2B மற்றும் 2A உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 5391 இன்படி இருபத்துமூன்று தசம் ஒன்பது பேர்ச்சஸ்கள்(0ஏ. 0றூ. 23.9பே.) அல்லது சைபர் தசம் சைபர் ஆறு சைபர் நான்கு ஆறு ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுடையது.

மேற்குறிப்பிட்ட ஹொரணையில் அமைந்த "வெவஹேன" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. பீ. கே. கொஸ்தா தயாரித்த 19, சனவரி 1982 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1525 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட காணியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ள குறித்த காணித்துண்டுகள் 2L மற்றும் 2K வடக்கில் : இரத்தினபுரியிலிருந்து பாணந்துறை வரை பிரதான ரோட்டும் துண்டு D உம் ; கிழக்கில் : துண்டுகள் D மற்றும் E உம் ; தெற்கில் : துண்டு G உம் ; மேற்கில் : துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1525

இன்படி ஒரு ஏக்கர் ஒரு றூட் மற்றும் பதினாறு தசம் இரண்டு பேர்ச்சுகள் (1ஏ. 1றூ. 16.2பே.) அல்லது சைபர் தசம் ஐந்து நான்கு ஆறு எட்டு மூன்று ஹெக்டேயர்கள் (ஹெக். 0.554683) ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹொரணை காணிப்பதிவகத்தில் C 325/144 இல் பதிவு செய்யப்பட்டது.

துண்டு 2 என அடையாளமிட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. ஏ. பி. ஜயசூரிய தயாரித்த 1 ஒற்றோபர் 2010 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 5382 இன்படி பின்வரும் விதத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு ஹொரணையில் அமைந்த "வெவஹேன" என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 5382 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : இரத்தினபுரியிலிருந்து பாணந்துறை வரை பிரதான ரோட்டும் ; கிழக்கில் : துண்டுகள் D மற்றும் E உம் ; தெற்கில் : துண்டு G உம் ; மேற்கில் : வரைபடம் இல. 1525 இல் துண்டு 1 ஆம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 5382 இன்படி ஒரு ஏக்கர் ஒரு றூட் பத்து தசம் ஐந்து பேர்ச்சுகள் (1ஏ. 1றூ. 10.5பே.) அல்லது சைபர் தசம் ஐந்து மூன்று இரண்டு நான்கு ஒன்று ஹெக்டேயர்கள் (ஹெக். 0.53241) ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட துண்டு 2 பிரசித்த நொத்தாரிசு டி. கித்துல்கொட அத்தாட்சிப்படுத்திய 13.01.2011 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 2517 இன் கீழ் ஈடுவைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பீ. கன்னங்கர,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹொரணை,
2014.01.23.

3-309

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2013.12.12 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. "பிரசித்த நொத்தாரிசு ஜே. எம். பீ. டபிள்யூ. திலகரத்ன அத்தாட்சிப்படுத்திய 2009.03.12 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 976 இன் பேரில் தெஹிவளை, கெம்பல் பிளேஸ், இல. 37 இல் அமைந்த எம்/எஸ் த ரிட்ஸ் டுவரிஸ்ட் கெஸ்ட் அன்ட் ரெஸ்டுரென்டின் பங்குதாரர்கள், வத்தளை, எடேரமுல்ல, சிலுமின மாவத்தை, இல. 166 ஐச் சேர்ந்த திரு. ரத்நாயக்க முதியான்சேலாகே பேர்ஸி சனத் நிஹால் ரத்நாயக்க மற்றும் திருமதி கெகுல்தொட்டுவகே தொனா சாந்தி கமனிய கிரேஷ் விக்ரமரத்ன ஆகியோரிடமிருந்து 1 ஆம் கடன் மீது முதலும் 2013.09.13 ஆந் திகதி வரை வட்டியும் ஐம்பத்தாறு இலட்சத்து முப்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்தேழு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூ. 56.,30,867.54) அத்துடன் முப்பத்தொன்பது இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று நாற்பத்தைந்து ரூபா (ரூ. 39,16,645) மீது ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 2013.09.14 ஆந் ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும், 2 ஆவது கடன் மீது முதலும் 2013.09.13 ஆந் திகதி வரை வட்டியும் அறுபத்தாறு இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்தெட்டு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 66,62,828.61) அத்துடன் நாற்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூறாயிரத்து முந்நூற்று எண்பத்தைந்து ரூபா ஏழு சதம் (ரூ. 44,90,385.07) ஆண்டுக்கு பதின்மூன்று (13.0%) வீதத்தில் 2014.09.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. 2009.03.12 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி. இல. 976 இன் பேரில் 1 ஆம் கடன் மீது ஐம்பத்தாறு இலட்சத்து முப்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்தேழு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூ. 56.,30,867.54), 2 ஆவது கடன் மீது அறுபத்தாறு இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்தெட்டு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 66,62,828.61) அத்துடன் 2013.09.14 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு, இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி வெள்ளவத்தை மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளை கல்கிசை மாநகர சபை எல்லைகளுள் தெஹிவளை பிரதேச செயலகம், 540A, தெஹிவளை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் சல்பிட்டி கோரளை பல்லேபற்றுவில் தெஹிவளையில் அமைந்த கெம்பல் பிளேஸ், வரிமதிப்பிலக்கம் 37 ஐக் கொண்ட 'அலுத்வத்த' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எப். சமீர் தயாரித்த 1978, செத்தெம்பர் 30 ஆந் திகதியிட்ட (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எப். சமீர் தயாரித்த 12.10.2008 ஆந்திகதியிட்ட புறக்குறிப்புக்கமைய) வரைபடம் இல. 2066 இல் விபரித்த துண்டு X3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: கெம்பல் பிளேசும் ; கிழக்கில் : துண்டு X2 உம் ; தெற்கில் : 2 ஆவது ஒழுங்கையும் துண்டு 11BA, 14A உம் ; மேற்கில் : புகையிரதப் பாதைகளும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2066 இன்படி பதினாறு தசம் எட்டு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 16.85பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு

அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது நுகேகொடை, தெல்கந்த காணிப் பதிவகத்தில் தெஹி 100/110 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) ஜே. ஞானசம்பந்தன்,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வெள்ளவத்தை,
2014, சனவரி 23.

3-310

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 643406 - சுரதுர என்டடேன்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்

27.02.2013 ஆந் திகதியன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி பணிப் பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானமாவது :-

"கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஓ. ஆர். பெர்னாந்து என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 11.04.2005 ஆந் திகதிய 8774 ஆம் இலக்க முறியின் மீது வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு சுரதுர என்டடேன்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாகவும் இல. V. C. 329, அம்பிட்டிய, கண்டி எனும் விலாசத்தில் தனது பதிவு அலுவலகத்தை நடாத்திச் செல்லும் சந்தன சக்குரா கராகொட பத்திரன மற்றும் முதியன்சே ஸ்வர்னமாலி பத்திர ஆகியோர் ஈட்டாளர்களாக கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு வருமதியான கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது நாற்பத்தைந்து இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து தொளாயிரத்து எண்பத்தேழு ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 45,78,987.37) பணத்தொகை 03.01.2013 ஆந் திகதியன்று உள்ளவாறு கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீஇற்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளதாலும் மேற்படி நாற்பத்தைந்து இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து தொளாயிரத்து எண்பத்தேழு ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 45,78,987.37) பணத்தொகையும் அத்துடன் 04.01.2013 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை காலத்துக்கான ரூபா 41,54,600 பணத்தொகைக்கு 22% வருடாந்த வட்டியும் விளம்பரச் செலவுகளையும் கூறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுபவையும் 8774 ஆம் இலக்க முறியினால் மேற்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனமும் வளவுகளும் கண்டி, மாவில்மட, லேவெல்ல ரோட், துட்டுகெமுனு மாவத்தையில் இல.369/1 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், அம்பிட்டிய உடகம கண்டி வடக்கு கங்தஹுய கோரளை மற்றும் கங்க வட்ட கோரளையில் அமைந்துள்ள கெதரவத்த ஒரு பகுதி உட்பட கப்புகனத்தேஹேன, தொரகடகும்புர கப்புகனத்தேஹேன மற்றும் கடவத்தேவத்த தற்போது ஒரே காணியான காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. வீரபன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 26.02.1996 ஆந் திகதிய 776 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 02 எனும் காணியின் எல்லைகள் - வடக்கு : மேற்கூறிய வரைபட இலக்கம் 776 இல் குறிக்கப்பட்ட லொட் 1 ; வடகிழக்கு : கண்டி தலாதுஓயா பெருந்தெரு ; தெற்கு மற்றும் தென்கிழக்கு : மேற்கூறிய வபைடத்தில் குறிக்கப்பட்ட லொட் 3 ஐப் பிரிக்கும் ஓடை ; மேற்கு : மேற்கூறிய வரைபட இல. 776 இல் குறிக்கப்பட்டுள்ள லொட் 1 எனும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள வரிப்பண இல. 329/1 எனும் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். இது முப்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 30பே.) (0.07588 ஹெக்டயார்) பரப்பளவானது. இது கண்டி காணிப் பதிவகத்தில் G 365/77 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், அம்பிட்டிய உடகம கண்டி வடக்கு கங்தஹுய கோரளை மற்றும் கங்க வட்ட கோரளையில் அமைந்துள்ள கெதரவத்த ஒரு பகுதி உட்பட கப்புகனத்தேஹேன, தொரகடகும்புர கப்புகனத்தேஹேன மற்றும் கடவத்தேவத்த தற்போது ஒரே காணியான காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. வீரபன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 26.02.1996 ஆந் திகதிய 776 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 03 எனும் காணியின் எல்லைகள் - வடக்கு : மேற்கூறிய வரைபட இலக்கம் 776 இல் குறிக்கப்பட்ட லொட் 2 ஐப் பிரிக்கும் ஓடை ; கிழக்கு : கண்டி தலாதுஓயா பெருந்தெரு ; தெற்கு மற்றும் தென்கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரன்ஜித் விஜேசுந்தர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 661 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 1 மற்றும் லொட் 2 உடகமவெலே அமரதுங்கவின் வயல் மற்றும் ; மேற்கு : யாபா என்பவருக்குச் சொந்தமான வயல் எனும் இவ்வெல்லைக்குள் அமைந்தள்ள மற்றும் சகலதுமாகும். இது இருபத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 25பே.) (0.06323 ஹெக்டயார்) பரப்பளவானது. இது கண்டி காணிப் பதிவகத்தில் G 365/78 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்வட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவிற் பகுதி கெதரவத்தை ஒரு பகுதி உட்பட கப்புகனத்தேஹேன, தொரகடகும்புர கப்புகனத்தேவத்த மற்றும் கடவத்தேவத்த எனும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. ரீ. டேவிட் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 04.01.1952 ஆந் திகதிய 3680 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 03 மற்றும் லொட் 4 எனும் காணிகள் உட்பட கே. வீரபன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 26.02.1996 ஆந் திகதிய 776 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள லொட் 2 மற்றும் லொட் 3 கெதரவத்தை ஒரு பகுதி உட்பட கப்புகனத்தேஹேன தொரகடகும்புர, கப்புகனத்தேவத்த மற்றும் கடவத்தேவத்த தற்போது ஒரே காணியாக

வரிப்பண இல. 329/1 எனும் சூழல் அண்மையில் செய்யப்பட்ட அளவையின் பிரகாரம் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஜீ. ரூபசிங்ஹ என்பவரினால் 31.01.2005 ஆந்திகதிய 3270 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள லொட் 1 எனும் காணித்துண்டு விபரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள் - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் மு. வீரபன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 777 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 1; கிழக்கு : கண்டி தலாதுஓயா பெருந்தெரு; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரன்ஜித் விஜேசுந்தர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 661 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 2 உடகமவெலே அமரதுங்கவின் வயல் மற்றும் ; மேற்கு : யாபா என்பவரால் உரிமை கோரும் சொந்தமான வயல் எனும் இவ்வெல்லைக்குள் அமைந்துள்ள வரிப்பண இல. 329/1 எனும் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். இது ஒரு றூட் பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15பே.) பரப்பளவானது. இது கண்டி காணிப் பதிவகத்தில் G 416/121 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

3-368

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 1033 5099 8597/0033 5002 1751 - எம். ஐ. எம். ராசீம்

2014, சனவரி 30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை , இல. 110 இல் தமது பதிவு அலுவலகத்தை ஸ்தாபித்துள்ள, சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசுவான கே. எல். எம். டீ. கித்சிறி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, பெப்புருவரி 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 286 மற்றும் 2010, சனவரி 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 695 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் எனும் வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொஹமட் இஸ்மயில் மொஹமட் ராசீம் என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள் 286 மற்றும் 695 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஐம்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து ஐநூற்று இரண்டு ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 54,91,502.84) 2014, சனவரி 13 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட ஐம்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து ஐநூற்று இரண்டு ரூபா எண்பத்து நான்கு சதம் (ரூ. 54,91,502.84) 2014, சனவரி 14 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 286 மற்றும் 695 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நாற்பது இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து அறுநூற்று ஒன்பது ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 40,69,609.45) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு வீதம் (18%) மேலும் எட்டு இலட்சத்து எழுபத்தோறாயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 8,71,500) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு இருபது வீதம் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 286 மற்றும் 695 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது. கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்ட கோரளை, மேல் தெற்கு பத்து இரத்தினபுரி மா நகர சபை எல்லைகளுக்குள் செயலாளர் பிரிவிற்குள் இரத்தினபுரியில் அமைந்த வரக்கதொட்ட, பள்ளி வாசல் வீதி, வரிமதிப்பீட்டு இல. 26 ஐ ஏற்ற ''சன்னாசிகேகொடல்ல'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். யூ. கன்னங்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, நவெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 4208 ஆம் இலக்க (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஈ. ஏ. போபாதீர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, மே 01 ஆந் திகதி அசல் பிரதி என அத்தாட்சிப்படுத்தப்பட்ட) எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 02 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : களு அப்புவிற்கு சொந்தமான காணி, ஒற்றையடிப் பாதை மற்றும் உடவத்தை; கிழக்கிற்கு: பள்ளி வாசல் ஒழுங்கை ; தெற்கிற்கு : சன்னாசிகொடல்லவின் ஒரு பகுதி மற்றும் மேற்கிற்கு : பள்ளியாகும்புர மற்றும் லொட் 1. ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஏழு தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 27.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும். நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4208 எனும் வரைபடத்திற்கு அமைவாக இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 800/233 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3-339/1

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 1020 5399 4091 - பீ. ஜீ. சீ. டீ. கருணாரத்ன

2014, சனவரி 30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை , இல. 110 இல் தமது பதிவு அலுவலகத்தை ஸ்தாபித்துள்ள, சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசுவான கே. எல். எம். டீ. கித்சிறி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, பெப்புருவரி 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 1195 எனும் ஈட்டுமுறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெப்பிலியாவெல கமராலலாகே சமிந்த தனூஷ கருணாரத்ன என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கம் 1195 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் ஐம்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தோறாயிரத்து முப்பத்தாறு ரூபா ஒரு சதம் (ரூ. 52,81,036.01) 2013, திசெம்பர் 23 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட ஐம்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தோராயிரத்து முப்பத்தாறு ரூபா ஒரு சதம் (ரூ. 52,81,036.01) 2013, திசெம்பர் 24 ஆந் திகதி முதல் இல. 1195 எனும் ஈட்டுமுறியின்மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நாற்பத்து எட்டு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து நூற்று பதின்நான்கு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 48,32,114.61) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிக்கு பதின்மூன்று வீதம் (13%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 1195 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், பல்லே பத்துவின் கோரளை துன்னானே குருவிட்ட கோரளை, எஹெலியகொடை பிரதேச சபை எல்லைகளுக்குள் முருதன்ககல கிராமத்தில் அமைந்த "நரியமுல்லஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. கே. எஸ். பமுனுசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, சனவரி 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 1659 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 09 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 10 ; கிழக்கிற்கு : லொட் R1 ; தெற்கிற்கு : லொட்கள் 7 மற்றும் 8 மற்றும் மேற்கிற்கு: லொட் 7 மற்றும் அந்தனி பெரேராவின் அதே காணி ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் ஒன்று நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10.14பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1659 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிசாவளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் V 203/257 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மார்க்க உரிமைகள் மற்றும் அதன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான ஏனைய உரிமைகளுடனானது :

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. கே. எஸ். பமுனுசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, சனவரி 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 1659 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் R1, R2, R3, D1 மற்றும் D2 என குறிப்பிடப்பட்ட காணிகள் முறையே அவிசாவளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் V 206/108, V 206/107, V 206/109, V 206/110 மற்றும் V 206/111 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3-339/2